DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.303/2023**

Deposition of witness for Prosecution அ.சா.7

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிளவர் ஷீலா |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சண்முகம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 22.06.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், நரிக்குடி சர்கிள் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.07.2018 ம் தேதி தேவகோட்டை சர்கிள் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது திருவேகம்பத்தூர் காவல் நிலைய குற்ற எண்.17/2018, இதச பிரிவுகள் 279,304(A) வழக்கை காவல் ஆய்வாளர் திரு.சாது ரமேஷ் அவர்கள் பணியிடம் மாறுதல் அடைந்ததன்பேரில் எனது தொடர் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்ததில் ஆய்வாளர் சாது ரமேசிடம் கூறிய சங்கதிளை கூறியதால் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யாமல் விபத்தில் இறந்துபோன பிரேதத்தை பிரேத விசாரணை செய்த மருத்துவர் திரு.சதாசிவம் அவர்களையும் விசாரித்து பிரேத

பரிசோதனை அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். (**மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் வழக்கின் புலன்விசாரணையை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

இந்த வழக்கு சம்பந்தமாக நான் சம்பவ இடத்திற்கு சென்று விசாரித்தேனா என்றால் ஆமாம். புகார்தாரரின் கணவரின் வண்டியின் மீது மோதிய வாகனம் TN 63 AT 3289 splender pro என்றுதான் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம், புகார்தாரர் புகாரில் அவ்வாறுதான் குறிப்பிட்டுள்ளார். புகார்தாரரின் கணவரின் வாகனத்தின் மீது TN 63 AT 3989 splender pro என்ற வாகனம் மோதியதாக சொல்லியிருந்தால் அது தவறா என்றால் புகார்தாரர் விசாரணையில் புகாரில் வண்டி எண் தவறுதலாக குறிப்பிட்டதாக சொல்லி சரியான வண்டி என்னை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். எனக்கு என்ன சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றும் நான் நேரடியாக விசாரணை செய்யவும் இல்லை என்றும் ஏற்கனவே இருந்த விசாரணை அதிகாரி விசாரணை செய்திருந்த விபரங்களை ஒப்பிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.